★ விலை ரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

மலர் 26 பங்குனி 18 ஜ. ஆண்டு 82 இதழ் 44
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 26-3-84

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

சர்வகட்சி மாநாடு

## வெற்றிபெறுவதில் நம்பிக்கை இல்லை - 'அமிர்'

(சென்னை)

"இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத்தீர்வு காண்பதற்காக கூட்டப்பட்டுள்ள சர்வகட்சி மாநாடு வெற்றிபெறும் என்பதில் எந்தவித நம்பிக்கையும் இல்லை" என்று தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

திரு. அமிர்தலிங்கமும், திரு. ஆர். சம்பந்தனும் நேற்றுமுன்தினமிரவு கொழும்பிலிருந்து சென்னை வந்துசேர்ந்தனர்.

சென்னையில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் தான் மேற்கண்டவாறு திரு. அமிர்தலிங்கம் கூறினார்.

கடந்த இரண்டு மாதமாக நடைபெறும்சர்வகட்சி மாநாடு வெற்றிபெறுவதற்கான வாய்ப்புகள் எதுவுமே இதுவரை தோன்றவில்லை. அதேவேளை இலங்கை அரசாங்கம்சர்வகட்சி மாநாட்டினை இரண்டு மாதத்துக்கு பிற்போட்டிருப்பது, மாநாட்டில் கலந்துகொண்ட தமிழ்க்கட்சிகளுக்கு பலத்த ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது என்றும் திரு. அமிர்தலிங்கம் கூறினார்.

சர்வகட்சி மாநாட்டின் முன்

(8ம் பக்கம் பார்க்க)

★ யாழ்ப்பாணத்துக்கு நேற்று மாலை——

# அமைச்சர் லலித் திடீர்விஜயம்

# பாதுகாப்புகுறித்துஆராய்ந்தார்

(கா. யோகநாதன்)

தேசிய பந்தோபஸ்து அமைச்சராகவும், பிரதி பாதுகாப்பு அமைச்சராகவும் கடந்த வெள்ளிக்கிழமை பதவியேற்ற திரு. லலித் அத்துலத்முதலி நேற்று மாலை யாழ்ப்பாணத்துக்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார்.

சுமார் அரை மணி நேரம் மட்டுமே யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த அமைச்சர் லலித் இராணுவ, பொலிஸ் உயர் அதிகாரிகளைச் சந்தித்து வடபகுதி பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.



ஹெலிகொப்டரில் யாழ் வந்த அமைச்சருடன், அவரது பாரியாரும், பாதுகாப்பு அமைச்சின் நிரந்தரச் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிகல ஆகியோரும் வந்திருந்தனர்.

நேற்றுமாலை சுமார் ஐந்து மணியளவில் யாழ் 'கிங்ஸ்' ஹவுஸிற்கு ஹெலிகொப்டரில் வந்திறங்கிய அமைச்சர் 5 30 மணியளவில் கொழும்பு திரும்பினர்.

யாழ் மாவட்ட இணைப்பு அதிகாரி பிரிகேடியர் நலின் செனிவிரத்ன மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் அமைச்சர் யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையாவையும், 'கிங்ஸ் ஹவுஸி'ல் சந்தித்து யாழ். மாவட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்தும் பேச்சு நடத்தினர்.

யாழ். பொலிஸ் நிலையத்துக்கும் அமைச்சர் லலித் விஜயம் செய்திருந்தார்.

நேற்று மாலை ஐந்தரை மணியளவில் அமைச்சர் கொழும்பு திரும்பினர்.

## "பச்சை நிறச் சேலை கழுத்தைச் சுற்றியிருந்தது"

### உடுவில் கொலைவழக்கில் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

"சுருக்குப்போட்ட பச்சைநிறச் சேலை அன்னம்மாவின் கழுத்தை சுற்றியிருந்தது இருகைகளும், ஒரு வெள்ளைச் சீலைத் துண்டால் கட்டப்பட்டிருந்தது. அந்தச் சீலைத்துண்டின் துணி முதிக்காலில் கொண்டுபோய்க் கட்டப்பட்டிருந்தது. கட்டில் குழம்பிய நிலையிலிருந்தது. தலைமாட்டில் ஒரு தலையணி இருந்தது"

உடுவில் இரட்டைக் கொலை வழக்கில் சாட்சியமளித்த டாக்டர் ரி. ஞானசுந்தரம் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜே. ஜி. ஆசிர்வாதம் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில், உடுவிலில் 78 ஜனவரி 18-ம் திகதி செல்

(8-ம் பக்கம் பார்க்க)

மணமக்களின் சம்மதமின்றி

## பெற்றோர்நடத்தியதிருமணம்: மணமகள் தற்கொலை!

(மாவிட்டபுரம்)

மணமக்களின் சம்மதமின்றி பெற்றோர் ஒன்றுகூடி நடத்தி வைத்த திருமணம் ஒரு மாதத்திற்குள் விபரீதமான நிலையை ஏற்படுத்திவிட்டது. திருமணத்தின்போது அணிந்திருந்த பட்டுச்சேலை, நகைகள், தாலிக்கொடி என்பவற்றை அணிந்தபடி அந்த மணப்பெண் நஞ்சு அருந்தி சடலமாகக் காட்சியளித்தார்.

இப்பரிதாபகரமானசம்பவம் அளவெட்டியில் இடம்பெற்றுள்ளது. உமாசுதன் சாந்தி என்னும் 19 வயது யுவதியே இவ்வாறு மரணத்தைத் தழுவிக்கொண்டார்.

திடீர் மரண விசாரணை அதிகாரி நா. தம்பிராசா இம் மரணம் குறித்து விசாரணை நடத்தினர்.

இறந்தவரின் கணவர் அப்புத்துரை உமாசுதன், அயல் வீட்டுக்காரர் தந்தையார் நடராசா என்பவர்கள் சாட்சிய

(8-ம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பு மாவட்டம்:

## ஆசிரியர்களுக்கு காசோலை மூலமே சம்பளம்

(இரா. உதயகுமார்)

மட்டக்களப்பு ஆசிரியர்களின் சம்பள பணம் இனி மேல் தனித்தனி காசோலை மூலமாகமட்டுமே வழங்கப்படும்.

இதற்கமைய ஒவ்வொரு பாடசாலை அதிபர்களும் கல்வித்திணைக்களத்திலுக்கனுப்பி வைக்கப்படும் காசோலையை வசதிக்கேற்ப வங்கிக்கணக்கில் வைப்பிலிடலாம் அல்லது இதற்கெனத் தனியான கணக்கு ஒன்றை வங்கியில் ஆரம்பித்து வைப்பிலிட்டு சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு தனித்தனி காசோலையை எழுதி வழங்கலாம்.

இம்முடிவு நேற்று மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் ஒழுங்குசெய்யப்பட்ட அதிபர்கள் ஆலோசனைக் கூட்டத்தில்

(8-ம் பக்கம் பார்க்க)

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கக் கொள்ளை:

## இருவர்மீது வழக்குத் தாக்கல்

### ஒருவருக்குப் பிடி ஆணை

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளை நிலையக் கொள்ளை தொடர்பாக இரு சந்தேகநபர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக இதுவரை கைது செய்யப்படாமலிருக்கும் சந்தேகநபருக்கு பகிரங்க பிடிவிறாந்தும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை ப நோ கூ சங்க 4-ம் இலக்க கிளை நிலையத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த மூன்று இளைஞர்களால் துப்பாக்கிமுனையில் 3 700 ரூபா பணமும், 206 ரூபா பெறுமதியான உணவு முத்திரைகளும் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவத்தின்போது சந்தேகநபர் ஒருவர் மோட்டார் சைக்கிளுடன் பொதுமக்களால் துரத்திப் பிடிக்கப்பட்டது தெரிந்ததே.

பலாலியைச் சேர்ந்த நல்லதம்பி விக்னேஸ்வரன் என்னும்

(8ம் பக்கம் பார்க்க)

## தேசிய சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

பண்டாரகமவில் இழுக்கப்பட்ட 961-வது இலங்கை தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

1-வது பரிசு:
21 O 0666
ரூ. 2 லட்சம்

2-வது பரிசு:
14 N 0081
ரூ. 7 ,000

3-வது பரிசு:
18 O 0110
ரூ 25,000

(5-ம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தூதுவர் நிலைமையை விளக்கினர்

(கொழும்பு)

இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவரும், சென்னையிலுள்ள இலங்கைக்கான உதவித் தூதுவரும் அரசாங்கத்தின் அவசர அழைப்பின் மீது கொழும்பு திரும்பியுள்ளனர்.

புதுடில்லியிலுள்ள இலங்கைத் தூதுவர் திரு. வேர்னன் நவரத்ன, சென்னையிலுள்ள உதவித் தூதுவர் திரு. எஸ் பியசேன ஆகிய இருவரும் அவசர அழைப்பின் பேரில் கொழும்பு வந்துள்ளனர்.

இவர்கள இருவரும் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்கள்.

இந்தியாவில், குறிப்பாக தமிழ்நாட்டில் வடபகுதி தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் பற்றிய உண்மை நிலை குறித்து இச்சந்திப்பின்போது ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

"றெனல்ட் றீகன் எளிமையாகப் பேசுபவர் ஆனால்....

# தனிப்பட்ட உறவுகள் பேச்சுக்களில் பயனில்லை!"

## அமெரிக்க பத்திரிகைக்கு இந்திரா பேட்டி

புதுடில்லி, மார்ச் 25

"ஜனாதிபதி றொனல்ட் றீகன் எளிமையாகப் பேசும் சுபாவமுடையவர். ஆனால் தனிப்பட்ட உறவுகளிலும், பேச்சுக்களிலும் பயனில்லை. இந்தியா அமெரிக்காவுடன் எப்போதும் மேலான உறவுகளையே வைத்திருக்க விரும்புகிறது" என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கூறினார்.

அமெரிக்க இணப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே திருமதி காந்தி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

அமெரிக்க அதிபர் திரு. றொனல்ட் றீகன் அவரது தலைமை ஆலோசகர்களால் தவறாக வழிநடத்தப்படுகிறார்.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் அமெரிக்காவின் போக்கிற்கு எதிராக இருக்கும் நாடுகள் மீது எதிர்ப்புக் கொள்கைகளை உருவாக்கும் வகையில் அவர் நெறிப்படுத்தப்படுகிறார். இதனால் அந்நாடுகள் பழிவாங்கப் படுகின்றன.

ஜனாதிபதி றீகன் தனிப்பட்ட வகையில் இதமாகவும், எளிமையாகவும் பேசுபவர். ஆனால் பொதுப் பிரச்சினைகளைத் தீர்க்க தனிப்பட்ட உறவுகள் எந்த வகையிலும் ஏற்றவையல்ல.

இந்தியா நடுநிலையான ஒரு நாடு ஒவ்வொரு நாட்டுக்கும் இருக்கும் ஒவ்வொரு கொள்கை போன்றே இந்தியாவும் தனக்கென ஒரு கொள்கையை வைத்துள்ளது.

அணிசேராக் கொள்கைகளில் இந்தியா நம்பிக்கை கொண்டது. எந்த இராணுவ வல்லரசுகளுடனும் சேரும் நோக்கம் அதற்கில்லை. விடுதலை பெறுத நாடுகளுக்கு ஆதரவளிப்பது அதன் முக்கிய நோக்கமாகும்". (இ)

## லெபனானிலிருந்து பிரெஞ்சுப்படைகள் வாபஸ்!

பெய்ரூட், மார்ச் 25

லெபனானிலிருந்து பல தேசப் படைகளில் இடம்பெற்று வந்த பிரெஞ்சுத் துருப்புகள் நேற்று வாபஸ்பெறத் தொடங்கின.

லெபனானில் 1650 பிரெஞ்சுத் துருப்புகள் உள்ளன. இவை யாவும் இம்மாத முடிவுக்குள் பூரணமாக வாபஸ்பெற்றுவிடுமென்று பிரெஞ்சுப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.

லெபனானில் அமெரிக்க, பிரிட்டன், இத்தாலியப் படைகள் பல தேசப் படைகளில் அங்கம் பெற்றிருந்தன. இவை கடந்த மாதம் வாபஸ்பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பெய்ரூட்டின் கிழக்குப் பகுதியில் டுரூஸ் தீவிரவாத முஸ்லிம்களுக்கும் லெபனான் இராணுவத்திற்குமிடையே மோதல்கள் இடம்பெற்றுவருகின்றன. பெய்ரூட்டின் மேற்குப் பகுதி தமது படைகளின் கட்டுப்பாட்டில் உள்ளதென்று டுரூஸ் இயக்கத் தலைவர் ஜும்ப்ளாட் தெரிவித்தார். (இ)

## நீர்வேலி கந்தசுவாமிகோயில் 28-ல் கொடியேற்றம்

(நீர்வேலி)

நீர்வேலி, அருள்மிகு கந்தசுவாமி கோயில் கொடியேற்றம் நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறுகிறது.

விசேட உற்சவ நிகழ்ச்சிகள் சில வருமாறு: ஏப்ரல் மாதம் ஐந்தாம் திகதி வியாழக்கிழமை கார்த்திகை உற்சவம் 6-ம் திகதி மஞ்சம் பதினொராம் திகதி புதன்கிழமை பிற்பகல் மாம்பழத்திருவிழா பன்னிரண்டாம் திகதி வேட்டைத்திருவிழா 13-ம்திகதி வருடப்பிறப்பன்று இரவுசப்பரத் திருவிழா. 14-ம் திகதி காலை எட்டு மணிக்கு இரதோற்சவம் 15-ம் திகதி தீர்த்தோற்சவம் 16-ம் திகதி திங்கட்கிழமை பூங்காவன திருக்கல்யாண உற்சவமும்.

தினமும் இரவு வேளைகளில் சிறப்புச் சொற்பொழிவுகள் பக்திப்பாடல்கள் பிரார்த்தனைகள் நடைபெறும்.

## கும்பாபிஷேகம்

(இனிதொசிலி)

அக்கராயன்குளம் விக்கின விநாயகர் ஆலய கும்பாபிஷேகம் கடந்த 15ம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து 21 நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

கிளிநொச்சிக்குறி நீர்ப்பாசனப் பொறியியலாளர் திரு. குமாரசுவாமி தலைமையில் கோணாவில், அக்கராயன் பகுதி மக்கள் ஆதரவுடன் இக்கோவில் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 4ம் திகதி சங்காபிஷேகமும், அன்னதானமும், இரவு கலைநிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. (கா)

## சிரமதானம் மூலம் துப்புரவு

(கரவெட்டி)

கரவெட்டி சோனப்பு மைதானத்தை அண்மையில் கரவெட்டி மத்தி கிராமமுன்னேற்றச் சங்கத்தினர் சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர்.

சங்கத்தலைவரும் இளைப்பாறிய விரிவுரையாளருமான திரு இ முத்துத்தம்பி தலைமையில் நடைபெற்ற இச்சிரமதானத்தில் முதியோர்களும் சிறுவர்களும் கலந்துகொண்டனர்.

## வீட்டுத் தோட்டப் போட்டியில் முதலிடம்

(கரவெட்டி)

உடுப்பிட்டி கல்வி வட்டாரப் பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட வீட்டுத் தோட்டப்போட்டியில் கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயம் முதலாம் இடத்தையும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் இரண்டாமிடத்தையும் பெற்று வெற்றியீட்டியுள்ளன.

## சுத்தானந்த பாரதிக்கு இலக்கிய பரிசு

சென்னை, மார்ச் 25

சிறந்த இலக்கிய நூலுக்கான பரிசை கவியோகி சுத்தானந்த பாரதியின் "பாரத சக்தியின் மகாகாவியம்" என்ற நூலுக்கு தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் வழங்கியுள்ளது.

"ராஜராஜன் விருது" என்ற இப்பரிசை 88 வயதான கவி சுத்தானந்த பாரதிக்கு தமிழக கல்வியமைச்சர் திரு. அரங்கநாயகம் வழங்கினார்.

இவ்விருது 1 லட்சம் ரூபா பணத்தையும், சான்றிதழ் ஒன்றையும் கொண்டது. (இ)


சகல மருந்துவகைக்கும் பாவனையாளர் பொருட்களுக்கும் யாழ்ப்பாணம் ஒட்டோஸ் லிமிட்டெட் (Autos Ltd) வழங்கும்

விசேட சலுகை

ரூபா 50க்கு உட்பட்ட கொள்வனவுக்கு 3% விலைக்கழிவு...!
ரூபா 50க்கு மேற்பட்ட கொள்வனவுக்கு 5% விலைக்கழிவு ..!!
(சலுகை கைவிருப்பு உள்ளவரை மட்டுமே)

ஒட்டோஸ் லிமிட்டெட் (AUTOS LTD.)
190, ஆஸ்பத்திரி வீதி, [1551] யாழ்ப்பாணம்.

★ ஸ்பெயின் ★ இத்தாலி ★ பிரான்ஸ்
சகாய விலையில் ரிக்கட்டுகளுக்கும் பிரயாண ஒழுங்குகளுக்கும்
AIR-TRANSIT
TRAVEL CONSULTANTS
99-2/56 B, கபூர் பில்டிங் 2-வது மாடி கொழும்பு-1. போன்: 549865
538 B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். போன்: 22689
[1570]



ரூ. 1,550/- இலிருந்து மேல்

சிங்கர்* (ஸ்ரீ லங்கா) லிமிடெட்.

* Registered Trade Mark of the SINGER Company

ராணி (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்-மாதவி
டிக் டிக் டிக்
(சகலகலாவர்)

சாந்தி (யாழ். நகர்)
25 - 27
தினசரி 10-30, 2-30, 4-45, 7 00 p. M.
NIGHT OF THE SEA GUL
Horror - action - color

வெலிங்டன் மாவிட்டபுரம்
தினசரி 2-30, 6-00
பாக்கியராஜ் - அம்பிகா
அந்த ஏழு நாட்கள்

இதுவே கடைசி வாரம்
ராஜா (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00 9-00
கமல்— ஸ்ரீதேவி— இசை
மீண்டும்கோகிலா
(சகலகலா வசூல்)

ஹரன் (யாழ். நகர்)
10-30, 2-30, 7-15, 9-30
Sean Connery
A BRIDGE TOO FAR
(Color)

From 24th to 26
வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 5 காட்சிகள்
Brad Davis - John Hurt
in
MIDNIGHT EXPRESS
The highly Controversial movie of the Decade
நீங்காத நினைவை பார்ப்போர் மனதில் பதிக்கும் ஒப்பற்ற ஓவியம்
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

மகத்தான
85வது மகளிர் தினம்
நீகல் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,



பயணங்கள்
முடிவதில்லை
கடைசி சந்தர்ப்பம்

லிடோ (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரவீந்தர் - ரூபா
ஒரு தலைராகம்

இன்று மட்டும்
வெலிங்டன்
10 30 2-15 4-30,
RAIDERS OF THE LOST ARK

மாலை 6-00 இரவு 9.00
ரவிச்சந்திரன் - ஜெயலலிதா
நான்
(புதியபிரதி சகலகலாவர்)

## இன்றையபலன்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இடைக்காலப் பிரிவுக்கும் இடமுண்டு. தெய்வநம்பிக்கை சிறந்த மருந்து.

துலாம்:- பொன்னுன சந்தர்ப்பமொன்று உங்களைப் பூரிப்படையச்செய்யும் தேடியஉறவு உங்களை நாடிவர வாய்ப்பு. இளம் பருவத்தினர்களுக்கு இன்று இன்பப்பூஜை. பறந்து வரும் கடிதமொன்று உங்களைப் பரவசப்படுத்துங்கபதாள்.

விருச்சிகம்:- இதர விஷயங்களிலே போதும் மனதிம்மதியைத் தேடியலைவீர்கள். குடும்பத்திலும் சிறுபிணிக்கு இடமேற்படலாம். வைத்தியச் செலவுகளும் ஏகப் பணம் விரயமாகலாம். தவிப்புக்களே நம்பவேண்டாம். சுறுசுறுப்பானத்தைத் தவிர்க்கவும்.

தனுசு:- உழைப்பின் வெற்றிக்கு இன்று உறுதியளிக்கப்படுகிறது அதிக பிரயாசையின் மூலம் ஆதாயத்தைத் தேடுவீர்கள். பரோபகார சிந்தை மேலிடும் சந்தூடலில் நிம்மதி சிரமையும் உழைப்புக்கேற்ற ஓய்வு அவசியம் தேவை.

மகரம்:- அருளும்பொருளும் இன்று இணைந்துகிடைக்கும் தொழில் துறையில் ஏற்படும் போட்டியில் வெற்றி உங்கள் பக்கமே இருக்கும் இல்வாழ்க்கையில் அதிகாரப்பேறுகிட்டக் கலாம் நீண்ட பயணத்தைத் தவிர்க்கவும்.

கும்பம்:- தெளிந்த மனதுடன் செயலாற்றும் புறப்படுவீர்கள். திரைப்படத்தொழில் சம்பந்தப்பட்டவர்கள் சிறப்படைவர். முயற்சி செய்வின் முன்னே நற்றிற்கிடமுண்டு. மணவிவகாரம் திருப்தியைக் கொடுக்கும்.

மீனம்:- நிதியில் முடக்கம் ஏற்படும் கிலர் விளம்பழிக்கு இலக்காவார்கள் விஷமிகளின் தொல்லைகள் புதிய உருவை எடுக்கும் பணிச்செல்லையில் பாதிப்பு ஏற்படலாம் துணிச்சலுடன் எதிர்நீச்சல் போட்டால் வெற்றியுண்டு.

சோதிடக்கலாநிதி

திருமலை வே. ரவீந்திரன்

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
வாயாடி

28-ந் திகதி முதல்
நீதிதேவன்

மனோகரா (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி— சாரதா
என்னைப்போல் ஒருவன்

## பிறந்த நாள் வாழ்த்து

செல்வி ஸ்ரெலா திருநாவுக்கரசு



நல்லூர் பாணுக்குளம் வீதியைச் சேர்ந்த திருநாவுக்கரசு புவனேஸ்வரி தம்பதிகளின் புதல்வி ஸ்ரெலா இனின் இரண்டாவது பிறந்த நாளை 26-ம் தேதி திங்கள் கிழமை கனடாவில் குதூகலமாகக் கொண்டாடுகிறார்கள். இலங்கையில் வசிக்கும் அப்பப்பா, அம்மம்மா, சித்திமார்கள் மாமன்மார்கள், குட்டி மாமன்மார்கள், தவா தரு புனித அந்தோனியார் அருள் பெற்று நீடூழி வாழ்க வாழ்க என்று வாழ்த்துகிறார்கள்.

1450

## பிறந்த நாள் வாழ்த்து

செல்வி தர்மினி தர்மகுலசிங்கம்



காங்கேசநகர் சந்திரந்தையைச் சேர்ந்த தர்மகுலசிங்கம் தனலட்சுமி தம்பதிகளின் தவப்புதல்வி தர்மினி தனது முதலாவது பிறந்த நாளை இன்று 26-3-84 இல் காரைநகர் மேற்கு வீதியிலுள்ள அவரது மாமா வீட்டில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், அண்ணன்மார், அக்காமார், மற்றும் உற்றார், உறவினர்கள் நயினை இறைவன் அருள்பெற்று எல்லாச் செல்வமும் பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றனர். (1599)

32, PALAM ROAD, திருநெல்வேலி.

# 84 A/L பௌதீகம்

வினா - விடை வகுப்புகள்

ஆரம்பம்: வெள்ளி மாலை 5 மணி 30-3-84

ஆசிரியர்: S. பாலச்சந்திரன்

(1555)

சுழிபுரம் ஸ்ரீபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தின்

## விசேட அறிவித்தல்

மேற்படி ஆலயத்தின் வருடாந்த முதலாவது பொங்கல் 27-3-84 செவ்வாய்க்கிழமையும், இரண்டாவது பொங்கல் 3-4-84 செவ்வாய்க்கிழமையும் நடைபெறும்.

மேற்படி ஆலயத்தில் அர்ச்சகராகக் கடமையாற்றிய பிரம்மஸ்ரீ வ. இராதாகிருஷ்ண சர்மா அவர்கள் 15-12-83 தொடக்கம் ஆலயத்தின் சகல காரியங்களிலிருந்தும் விலகிக்கொண்டார் என்பதை அம்பாள் அடியார்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

செயலாளர் (1600)

சவூதி அரேபியாவுக்கு

## வேலை வாய்ப்பு

லேபரஸ் (LABOURERS)

பொது உதவியாளர் (ஜெனரல் ஹெல்பர்)

அவசரமாகத் தேவை!

உடன் அனுப்பிவைக்கப்படுவீர்.

2 புகைப்படம் 2 பாஸ்போர்ட் பிரதியுடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

புளோரு மான்பவர் சேவிஸ் லங்கா லிமிற்றட் சார்பாக

B. F. சேவியர்,

1129, திருநகர், கிளிநொச்சி.

லேபர் லைசென்ஸ் இல. 438

FE/6/FEA/744/4465 (1540)

## நன்றி நவிலல்

காங்கேசன்துறை-குரு வீதி, 19-3-84-ல் நடைபெற்ற வே. அம்பலம்பிள்ளை (இலங்கை பென்சனியர்) அவர்களின் இறுதிச்சடங்கில் கலந்துகொண்ட அனைவருக்கும், அனுதாபச்செய்தி அனுப்பியோருக்கும், மலர் வளையம் சாத்தியோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். தனித்தனி அறிவிக்கமுடியாமைக்கு வருந்துகின்றோம்.

திருமதி அம்பலம்பிள்ளை
குடும்பத்தினர் (1608)

## கணக்காளர் பதவி வெற்றிடம்

பிரபல வர்த்தக ஸ்தாபனமொன்றிற்கு குறைந்தது 5 வருட காலம் அனுபவமுள்ள கணக்காளர் உடன் தேவை

சம்பளம், வேலை பற்றிய முழு விபரமும் நேரடியாகப் பேசலாம்.

ஆங்கில அறிவு, தட்டெழுத்து தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வயது 30 — 40

29-ந் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. 123196,

மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம்.

பனை அபிவிருத்திச் சபை

பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கான

## பதவி வெற்றிடம்

பனை அபிவிருத்திச் சபையின் பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. தகைமைகள்:
   எஸ். எஸ். சி. அல்லது ஜீ. சி. ஈ- (சாதாரணம்) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் படைக்கலச் சேவை, பொலிஸ்சேவை அல்லது அரசாங்க ஸ்தாபனங்களில் பாதுகாப்புச்சேவையில் 5 வருட அனுபவம்.
2. சம்பளம்.
   ரூபா 300/- 20 X 15 — 600/-
3. வயது:
   30 வருடங்கள் முதல் 50 வருடங்கள்

03-04-1984-ந் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

தலைவர்,
பனை அபிவிருத்தி சபை.

பனை அபிவிருத்தி சபை,
தேசிய வீடமைப்புச் செயலகம்,
கண்டி வீதி, யாழ்ப்பாணம். (1605)

# கிளிநொச்சியில் 'வெல்டிங்' தொழிற்சாலை நிறுவப்படும்

## ரேட்டறிக் கழகச் செயலாளர் தகவல்

(கிளிநொச்சி)

இளைஞர்களுக்கு பயிற்சியையும், வேலைவாய்ப்பையும் அளிக்கும் முகமாக கிளிநொச்சி பரந்தன் ரேட்டறிக் கழகம் "வெல்டிங்" தொழிற்சாலை ஒன்றை கிளிநொச்சியில் நிறுவப் போவதாக பிரஸ்தாப கழகத்தினால் நடத்தப்பட்ட இராப்போசன விருந்துபசார வைபவத்தில் உரையாற்றுகையில் கழகத்தின் செயலாளரான திரு. ப. வை. ஜெயபாலன் குறிப்பிட்டார்.

கிளிநொச்சிக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு வருகைதந்த தமிழ்நாடு, கேரளா, இலங்கை ரேட்டறி மாவட்டங்களின் ஆளுநரான பி. எம். கதிரேசன் கௌரவிக்கு முகமாக இந்த விருந்துபசாரம் அளிக்கப்பட்டது.

பிரஸ்தாப கழகத்தின் தலைவர் டாக்டர் என். சிறீதரன் தலைமையில் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன ஆணை முகாமையாளர் விடுதியில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. என். ஜெயநாதன், உதவி அரசாங்க அதிபர்களான திரு. எஸ். அமிர்தலிங்கம், திரு. கே. குணராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

திரு. ப. வை. ஜெயபாலன் தொடர்ந்து பேசுகையில்:

"கிளிநொச்சி பரந்தன் ரேட்டறிக் கழகம் இப்பகுதி வாழ் மக்களுக்கு அளப்பெரும் சேவைகள் செய்துள்ளது. எமது சேவைகள் சிறக்க ஆதரவு தரும் சகலருக்கும் நன்றி கூறுகிறோம்" என்றார்.

ரேட்டறியன் ச. பி. மரியதாஸ், அதிபர் எஸ். தர்மரத்தினம் ஆகியோரும் உரையாற்றினார்கள். (வெ)

---

3-வது டெஸ்ட்

# இலங்கை: 256 நியூ 3-135

(கொழும்பு)

இலங்கை - நியூஸிலாந்து அணிகளுக்கிடையே கொழும்பு பி. ஸி. மைதானத்தில் நடைபெறும் 3-வது கிரிக்கெட் டெஸ்டின் 2-ம் நாள் ஆட்டத்தில் நியூஸிலாந்து முதல் இன்னிங்ஸில் 3 விக்கெட் இழப்புக்கு 135 ஓட்டங்களை எடுத்தது. இலங்கை வீரர் ரவி ரத்நாயக்கா 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்.

இலங்கை முதல் இன்னிங்ஸில் 256 ஓட்டங்களை எடுத்தது. ரஞ்சன் மடுகல்லே ஆட்டமிழக்காமல் 89 ஓட்டங்கள் எடுத்தார். (சூ)

---

## வெற்றிபெறுவதில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றம் குறித்து இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் சிறப்புப்பிரதிநிதி திரு. ஜி. பார்த்தசாரதியிடம் விளக்குவதற்காக தாம் விரைவில் புதுடில்லி செல்லவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (சூ)

---

# நீதிமன்றம் வர தாமதித்தவருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

வழக்கொன்றில் சம்பந்தப்பட்ட சந்தேகநபர் ஒருவர், மதுபோதையுடன் தாமதித்து நீதிமன்றத்துக்கு வந்ததால், ஏப்ரல் 2-ம் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டார்.

மண்டைதீவு கனகசபை பரமேஸ்வரன் என்பவருக்கே இக்கதி நேர்ந்தது.

யாழ் நீதிமன்றத்தில் வழக்கொன்றுக்கு காலை 9-30 வர வேண்டிய மேற்படி நபர்: 9-45க்கு வந்ததாகவும் மதுபோதையுடன் நீதிமன்றக் கட்டளையை மீறி நீதிமன்றத்துக்கு வந்திருந்ததாகவும், நீதிமன்றப் பொலிஸ் சார்ஜன்ட் எஸ். மாணிக்கவாசகர், நீதவான் எஸ். நாகராசாவுக்குத் தெரியப்படுத்தினார்.

அந்நபரை சட்டவைத்திய அதிகாரி முன்னிலையில் பரிசோதனை நடத்தும்படி நீதவான் தெரிவித்தார்.

சட்டவைத்திய அதிகாரி எஸ். சுப்பிரமணியம் அவரைப் பரிசோதனை செய்த பின்னர் மதுபோதையிலிருந்ததாக நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்ததைத் தொடர்ந்து ஏப்ரல் 2ம் திகதி வரை றிமாண்டில் வைக்கும்படி நீதவான் உத்தரவிட்டார். (மா)

---

## பெற்றோர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மனித்தனர்.

"இறந்தவருக்கும், உமாசுதன் என்பவருக்கும் சம்பவத்திற்கு 25 தினங்களுக்கு முன் விவாகம் நடந்தது. இந்தத் திருமணத்தில் இறந்தவருக்கும் உமாசுதனுக்கும் விருப்பமில்லை. ஆனால் இருவரின் பெற்றோரும் ஒன்றுகூடி இறந்தவருக்கு உமாசுதன் மைத்துனர் ஆனபடியால் வற்புறுத்தித் திருமணம் செய்துவைத்தனர். இறந்தவர் மாமிச உணவுகள் சாப்பிடுவதில்லை. உமாசுதன் மாமிச உணவுகள் சாப்பிடுவார். இதனால் சம்பவதினம் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. உமாசுதன் இறந்தவரை மாமிச உணவு சாப்பிடுமாறு வற்புறுத்தினார். இதனால் இறந்தவர் மனமுடைந்த நிலையில் காணப்பட்டார். அத்துடன் வாழ்க்கையில் கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் தகராறுகள் எழுந்தன. இதனால் விரக்தியுற்ற இறந்தவர் நஞ்சருந்தி உயிரைப் போக்கிக் கொண்டார்." இவ்வாறு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இறந்தவர் பட்டுச்சேலை, நகைகள், தாலிக்கொடி அணிந்த நிலையில் சடலமாகக் காணப்பட்டார். விசாரணை முடிவில் மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கினார்.

"வாழப்போகும் மணமக்களின் சம்மதமின்றி பெற்றோர் தாம் நினைத்தவாறு திருமணங்களை நடத்தி வைப்பதால் அநியாயமான உயிர் இழப்புகள் ஏற்படுகின்றன. தமது சொத்துக்கள் வெளியே சென்று விடுமென்பதற்காக உறவுமுறையில் திருமணம் செய்யும் பெற்றோர்கள் மணமக்களின் விருப்பு வெறுப்புக்களையும் அறியவேண்டும். அவ்வாறு நடந்தால் இப்படியான உயிரிழப்புகளை தவிர்க்க முடியும்" என்று மரண விசாரணை அதிகாரி தமது தீர்ப்பின்போது கூறினார்.

சுன்னாகம் பொலிசைச் சேர்ந்த கான்ஸ்டபிள் கே. செல்வராசா சாட்சியளித்து ஆஜர் செய்தார். (வெ)

---



மண்ணுக்குக் கீழேதான் தங்கமும், வைரமும், வெள்ளியும், மணியும் இருக்கிறது. ஆனால், மண்ணையே பொன்னாக்க உங்களால் முடியுமா?

கோழித்தீனுக்கு, கடலில் காணப்படும் சிப்பிகளும் — அரைத்து மாவாக்கப்பட்டு — பயன்படுத்தப்படுவது பெரிய புதினமல்ல.

சிப்பி மாவுடன் மண்ணும் கடுமையாக அரிக்கப்பட்டு, தாராளமாகக் கலக்கப்பட்டு 'ஓகோ' என்ற விற்பனை செய்யப்படுகிறது! முருகப் பெருமானுக்குத்தான் வெளிச்சம்!

"ஊடுருவி"

---

# கூட்டுறவுக் கல்லூரி மூடப்படுவதற்கு ஆட்சேபம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதி கூட்டுறவுக் கல்லூரியை மூடிவிடுவதென எடுக்கப்பட்ட முடிவை, யாழ் மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் உத்தியோகத்தர் சங்கம் கண்டித்து அறிக்கை ஒன்றை விடுத்துள்ளதாவது.

மேற்படி சங்கத்தின் தலைவர் திரு. மு. வாமதேவன் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார். அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலவருடகாலமாக வடபகுதியில் கூட்டுறவாளர்கள் பல்வேறு துறைகளிலும் பயிற்றுவித்து தராதரப்பத்திரங்களை வழங்கி கூட்டுறவுச் சங்கங்களை நிர்வகிக்கக்கூடிய ஆற்றலும் திறமையும் வாய்ந்த பணியாளர்களை உருவாக்கிவந்தது யாழ். கூட்டுறவுப்பயிற்சிக் கல்லூரி.

பதவி உயர்வுபெறும் வகையில் கூட்டுறவுப்பணியாளர் உயர்பிரிவுப்பயிற்சி இதுவரை காலமும் பணியாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருந்தது. இக்கல்லூரி மூடப்படுவதால் கூட்டுறவாளர் பதவி உயர்வுக்குப் பெரும் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது. (மா)

---

## ஆசிரியர்களுக்கு...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் மட்டக்களப்பு பொலிஸ் அதிபர் விக்டர் பெரேரா, உதவிப் பொலிஸ் அதிபர் வி. பெரேரா, நிலைப் பொறுப்பதிகாரி கிருஷ்ணதாசன், மட்டக்களப்பு கல்வித்திணைக்கள அதிகாரிகள், மட்டக்களப்பு மாவட்ட பாடசாலை அதிபர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (வெ)

---

## இருவர் மீது..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாலிபரே பொதுமக்களால் பிடிக்கப்பட்டவராவார். பொலிசார் விசாரணை மேற்கொண்டு புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த இராசையா அன்னலிங்கம் என்பவரைக் கைது செய்திருந்தனர்.

இருநபர்கள் மீதும், மேற்படி சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்படாமலிருக்கும் சண்டிலிப்பாயைச் சேர்ந்த எஸ். ரவீந்திரன் என்பவருக்குமெதிராக கொள்ளையடித்தது, கொள்ளையடித்த பொருட்களை வைத்திருந்தது ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் காங்கேசன்துறைப் பொலிசார் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்தனர்.

இக்குற்றச்சாட்டுகளுக்குத் தாம் நிரபராதிகள் என்று மேற்படி இரு நபர்களும் நீதிமன்றத்தில் தெரிவித்ததை அடுத்து நீதிபதி சி. வி. விக்னேஸ்வரன் வழக்கு விசாரணையை மே மாதம் 28-ம் திகதிக்கு ஒத்திவைத்தார். கைது செய்யப்படாமலிருக்கும் எஸ். ரவீந்திரன் என்னும் சந்தேகநபருக்கு நீதிபதி பகிரங்க பிடிவிறாந்தும் பிறப்பித்தார். இரு சந்தேகநபர்கள் சார்பிலும் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜராகி இருந்தார்.

---

# மினிபஸ் விபத்து

## ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் 5-ம் கட்டையடியில் மினிபஸ் விபத்தில் காயமடைந்த ஒருவர் யாழ். பெரிய ஆஸ்பத்திரியில் நேற்று காலை அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மினிபஸ்ஸினால் மோதப்பட்டவர் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த வி. எஸ். இராமசாமி என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தின் பின்னர் மினிபஸ் அவ்விடத்தில் நிற்காமல் சென்று விட்டதாகப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (க)

---

## பச்சை நிறச்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அயல் வீட்டை கொள்ளையடிப்பதற்காக உடைத்ததாகவும், 30,000 ரூபா பெறுமதியான நகைகளை கொள்ளையடித்ததாகவும் கந்தர் செல்லையாவையும் மனைவி அன்னம்மாவையும் கொலைசெய்ததாகவும் கொலை கொள்ளையடிக்க சதி புரிந்ததாகவும், திரு. கணேசலிங்கம் சி. ஜெயந்திரன், அன்ரன் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது

1-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். சிறீகாந்தா, சட்டத்தரணி ஆர். டி. ரத்னசிங்கம், சட்டத்தரணி திருமதி கே. ரத்னலிங்கம் ஆகியோரும் 2-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஏ. தெய்வேந்திரன், சட்டத்தரணி கே. சோமசுந்தரமும், 3-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஜே. ஏ. ராஜகாரியரும் ஆஜரானார்கள். அரசதரப்பில் சட்டத்தரணி ஜ. ஞானதாசன் ஆஜரானார்.

டாக்டர் ஞானசுந்தரம் மேலும் கூறியதாவது: 'முதல் காயம் கைகளை சிதைத்தடியால் கட்டியதால் ஏற்பட்டிருக்கும். வயிற்றில் ஒருபகுதி செமித்த சோறு இருந்தது. இரவு சாப்பிட்டு 3, 4, மணித்தியாலத்தின்பின் இறந்திருக்கலாம்.'

இன்று விசாரணை தொடர்ந்து நடைபெறும். (க)

---

கிரிக்கெட்:

# யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர் வெற்றி

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி பழைய மாணவர்களுக்கும், யாழ். சென்பற்றிக்ஸ் பழையமாணவர்களுக்குமிடையே நடைபெற்ற '85 ஓவர்' கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர் கோஷ்டி வெற்றி பெற்றது.

இப்போட்டி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி 'பிக்னெல்' மைதானத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர்களான ரோவி பாக்கிய ஜோதியும், இரத்தின சபாபதியும் சிறப்பாக விளையாடி முறையே 40, 24 ஓட்டங்களைப் பெற்றனர். இவர்களிருவரும் சேர்ந்து ஆடி 56 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர்களான டேவிட் தம்பிராசாவும், இரத்தின சபாபதியும், ரோவி பாக்கிய ஜோதியும், சற்குணநாதனும் முறையே 4, 3, 2, 1 விக்கெட்டுகளை வீழ்த்தினர்கள்.

இப்போட்டிக்கு திரு. இராசையாவும், திரு. குணரத்தினமும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர்கள்.

ஸ்கோர் விபரம்: யாழ்ப்பாணக்கல்லூரி 109 — 7, சென்பற்றிக்ஸ் கல்லூரி 108. (வெ)

---

## ஓய்வு பெற்றார்

(யாழ்ப்பாணம்)

அரியாலையைச் சேர்ந்த திரு. தனுக்கோடி புண்ணியமூர்த்தி அரசாங்க மருந்தகலவையாளர் சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

38 வருடங்கள் இவர் தொடர்ச்சியாக சேவையாற்றியுள்ளார்.

கண்டியில் சேவையை ஆரம்பித்த இவர் யாழ்ப்பாணம், கொண்டாவில், மாந்தீவு, தருமபுரம், பளை ஆகிய அரசினர் வைத்தியசாலைகளில் தொடர்ந்து கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

# மரண அறிவித்தல்

## மா. நல்லைநாதன்

மறைவன்புலோ பிஸ்கால் மாணிக்கத்தின் புதல்வர் நல்லைநாதன் (கலாநிலைய அச்சகம் - யாழ்ப்பாணம்) அகால மரணமானார். மாணிக்கலீலா விநோதனின் சகோதரரான அவரின் இறுதிச்சடங்கு இன்று பிற்பகல் மறைவன்புலோவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை நண்பர்கள் உறவினர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

—மாணிக்கம் பூங்கா,
(1607) மறைவன்புலோ—சாவகச்சேரி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் உதயனத்தாரால் யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி மேற்கு வீதி, 68ம் இலக்க அச்சகத்தில் 198.—ம் ஆண்டு மார்ச் மாதம் 26 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 .Eelanadu-P. O. Box 49. Telegram: Eelanadu; Telephone: 22389—24126